Praise the Lord:

*கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.*
*நம் மீட்பர் நம்மோடு இருக்க தேவன் அவர் மூலம் கொடுத்த கிருபைக்காக ஸ்தோத்திரம்.*

## Let us Pray

பிலிப்பியர்/Philippians 4:19 (**பக்கம் 274**)

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் **குறைவையெல்லாம்** கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

my God will meet all your **needs** according to his glorious riches in Christ Jesus. (NIV)

*Ref: From Dictionary: (www.blueletterbible.com):* 1) necessity, need., 2) duty, business

குறை Needs **தேவைகள்**

*கிறிஸ்துவுக்குள் உள்ளவர்கள் ஜெபிக்கவேண்டியது . . . முக்கியமான தேவை necessity, duty.*

**உற்சாகமாக நாம் ஜெபிக்க முடியாமல் இருப்பது ஒரு குறை நமக்கு.** *(அல்லது)*

**உற்சாகமாக நாம் ஜெபிக்க வேண்டும். என்பது நமக்கு ஒரு தேவை.**

**என்** தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி **உங்கள்** குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

*இந்த வசனத்தை நான் சொல்லும்போது உங்களுக்காக ஜெபிக்கிறேன். நீங்கள் சொல்லும்போது நீங்கள் எனக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஜெபிக்கிறீர்கள்.*

***இப்படி நாம் ஒருவருக்கொருவர் ஒருமனப்பட்டு ஜெபிக்க ஆயத்தப்படுவோம். ஆமென்.***

---------------- யாருடைய ஜெபம் கேட்கப்படும்?

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். (1 யோ. 5:14)

*நமது இச்சையினால். . கேட்காமல்., நமது விருப்பத்துக்கு கேட்காமல், தகாதவிதமாய். .கேட்காமல் . . . தேவசித்தத்தின்படி கேட்கவேண்டும். . .)*

நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (**1 யோ.** 5:15)

*அக்கிரம சிந்தையில்லாமல , அக்கிரமங்களும் பாவங்களும் இல்லாமல்., சந்தேகப்படாமல், விசுவாசமுள்ளவர்களாக, செவிகொடுத்துவிட்டார் என்ற விசுவாசத்தோடு ஜெபிக்கும்போது, பெற்றுக்கொள்கிறோம்.*

*(1 அக்கிரம சிந்தையில்லாமல், 2. சந்தேகப்படாமல், 3. தேவசித்தப்படி. . . 4. கேட்கவேண்டும்).*

(Ref: Feb 9, 2007 Bible Study. . .) இதுபற்றி விவரமாக கற்றுக்கொண்டோம்.

**இப்படி கற்றுக்கொண்டதை, நினைவில் வைத்து, பின்பற்றமுடியாமல் இருப்பதும் ஒரு குறைதான்.**

----------------------

**நாம் உற்சாகமாக மற்றவர்களுக்காக ஜெபிக்கவேண்டும்.**

**ஜீவனுள்ள வசனத்தை, நான் மறந்துவிடாமல், அதை பின்பற்றி நடக்கவேண்டும்.**

**இந்த 2 தேவைகள் நமக்கு மிகத்தேவையும் அவசியமும் ஆனது.**

**இதை எனக்கும் உங்களுக்கும் நம் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படியே கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். ஆமென்.**

**இந்த உலகத்தின் வாழ்க்கையில், . . ..**

**அனாவசியத்தேவைகள் அதிகமாகும்போது,**

**அவசியத்தேவைகளை நிறைவேற்றமுடியாமல் வாழ்க்கையிலே குறைவு ஏற்படுகிறது.**

**நடைமுறை வாழ்க்கையை, கர்த்தரின் வேதம் கொடுக்கும் சிந்தையோடு ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், நாம் எவ்வளவு அனாவசியத் தேவைகளுக்காக நமது வாழ்க்கையிலே பிரயாசப்படகிறோம் என்பது எளிதில் விளங்கும். அதனால் மனம் சஞ்சலப்படவும் செய்யும்.**

**ஆனாலும். . .ஒருசமயம் அப்படி சஞ்சலப்பட்டாலும் மறுசமயம் நம்முடைய மனம் அனாவசியத் தேவைகளுக்காக வாஞ்சிக்கத்தான் செய்கிறது. சிந்தித்துப் பாருங்கள். . . ..**

பூமியிலுள்ளவைகளல்ல மேலானவைகளையே நாடுங்கள் என்ற வசனத்தோடு சேர்த்து,
நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளையும், எண்ணங்களையும், பேச்சுக்களையும் பூமியிலுள்ளவைகளோடும், ஆவியாயும் ஜீவனாயும் உள்ள இந்த தேவனுடைய வார்த்தைகளோடும் ஒப்பிட்டு, ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.
அப்பொழுது நமது வாழ்க்கையின் அத்தியாவசியத்தேவைகள் எவைகள் என்பதையும், தேவையில்லாத தேவைகள் எவைகள் என்பதையும் உணரலாம்.
உணர்ந்து, அவர் சித்தப்படி ஜெபித்தோமானால், அவர் நமக்கு செவிகொடுப்பார். ஆமென்.

---

எபேசியர்/Ephesians 4:31 (பக்கம் 267)

சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது.

Get rid of all bitterness, rage and anger, brawling and slander, along with every form of malice.

(**mal·ice** *n.* **1.** A desire to harm others or to see others suffer; extreme ill will or spite.

**2.** *Law.* The intent, without just cause or reason, to commit a wrongful act that will result in harm to another.)

நாம் கிறிஸ்துவோடு வளர்வதற்கு தடையாக இருக்கும் இந்த குற்றங்களை, பிழைகளை, கோளாறுகளை நம்மிடத்திலிருந்து நீக்கிப்போட வேண்டியது நமக்கு அவசியம். *(தேவை)*

எபேசியர்/Ephesians 4:32 (பக்கம் )

ஒருவருக்கொருவர் **தயவாயும் மனஉருக்கமாயும்** இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் **ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**

32Be kind and compassionate to one another, forgiving each other, just as in Christ God forgave you. (NIV)

இந்த வசனத்தில் உள்ளவைகள் நம்மிடம் மேலும் மேலும் நிரப்பபப்பட வேண்டிய நமக்கு அவசியம்.

31வது வசனத்தின் குணங்கள் நம்மிடத்திலிருந்து நீங்கவேண்டும்.

32வது வசனத்தின் குணங்களாலே நாம் நிரப்பவேண்டும்.

இதை வாஞ்சித்து, கர்த்தரிடம் ஜெபிக்கும்பொழுது, அவர் . .

தம்முடைய ஐசுவரியத்தின்படி, கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

இப்படியாக நாம் மேலும் மேலும் வசனங்களை தியானித்து தியானித்து, அவரிடம் மன்றாடும்பொழுது, கர்த்தருக்கு மகிமையில்லாத குணங்கள் நம்மைவிட்டு நீங்கும் ஃ
பிதாவினிடத்திலிருந்து இறங்கி வரும் நன்மையான எல்லா ஈவுகளாலும் கர்த்தர் நம்மை நிரப்புவார்.

நம்முடைய தேவைகள் கிறிஸ்துவுடைய மகிமையிலே நிறைவாகும்போது,

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

**என் தேவன்** தம்முடைய ஐசுவரியத்தின்படி **உங்கள் குறைவையெல்லாம்** கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

என்று நாம் உற்சாகத்தோடு சொல்லி ஜெபிக்கமுடியும். ஆமென்.

எங்கள் ஜெபத்தின் வல்லமையினால் அல்ல, எங்கள் திறமையினால் அல்ல ஆண்டவரே,
எங்களுக்குள் இருக்கும் மாம்சத்தின் சிந்தைகளை நீக்கிப்போட்டு நாங்கள் எங்களை வெறுமையாக்குகிறோம் ஆண்டவரே,
உம்முடைய ஐசுவரியத்தின்படி கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே எங்களை நிரப்பும்.
என நாம் அனைவரும் தேவனிடம் மன்றாட எழுந்திருப்போமாக.

## Let us Pray

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,*
*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*